**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 443/2020 |
| Deposition Of Witness for | Prosecution PW 2<br>Defense<br>Court |
| Name | திருமதி. ராஜவடிவு |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

எதிரிகள் ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29th day of October 2025.

நான் ஏர்வாடி பொன்னாகுறிச்சியில் வசித்து வருகிறேன். நான் தனியார் மருத்துவமனையில் நர்சாக வேலைபார்த்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். என்னுடைய அக்கா மகள். சாட்சி ரம்யா என்னுடைய தம்பி மகள். அ.சா.1 ம் ரம்யாவும், ஏர்வாடியில் உள்ள அனுரோஜா கடையில் வேலை பார்த்து வந்தனர். 15.08.2020 ம் தேதி இரவு 08.00 மணியளவில் கடையை அடைத்துவிட்டு பெருந்தெருவுக்கு கிழக்கே அ.சா.1 ற்கு சொந்தமான TN 72 BW 6440 Yamaha Ray சிவப்பு கலர் இருசக்கர வாகனத்தில் சுகுமார் தோட்டத்திற்கு அருகே வடக்கு பக்கத்தில் வரும்போது தெற்கிலிருந்து வந்த தோராயாமாக 18 லிருந்து 21 வயதிற்குள்ள நபர் அ.சா.1 ன் இருசக்கர வாகனத்தை தள்ளிவிட்டு, அ.சா.1 அணிந்திருந்த தங்க செயினை அறுத்திவிட்டார். சம்பவயிடத்திற்கு வடக்கே இருந்த வந்த 2 நபர்கள் சாட்சி ரம்யாவின் செயினை பறித்துள்ளார்கள், அது பித்தளை செயின் என்தால் துார எறிந்துவிட்டார்கள். சம்பவயிடத்திலிருந்து எங்களுடைய வீடு 200 மீ துாரம்

இருக்கும். வயற்காட்டில் இருந்த பெருந்தெருவை சேர்ந்த நபர்கள் சத்தம்போடவும், எங்கள் ஊரில் இருந்தநபர்கள் என்னிடம் வந்து அ.சா.1 மற்றும் சாட்சி ரம்யா சத்தம் போடுவதாக தகவல் தெரிவித்தார்கள். நான் சம்பவயிடம் சென்றேன். அ.சா.1 ற்கு நான் சென்றுபார்த்தபோது இடது காலில் காயம் இருந்தது, எலும்பு முறிவு ஏற்பட்டது போல் இருந்தது, ரம்யாவிற்கும் இடது காலில் காயம் ஏற்பட்டிருந்தது. அருகில் இருந்தவர்கள் மருத்துவமனைக்கு செல்ல சொன்னார்கள். நான், அ.சா.1, ரம்யா, ஊரில் உள்ள நபர்கள் ஆகியோர் காவல்நிலையம் சென்றோம். அ.சா.1 புகார் மனு அளித்தார். போலீஸார் மறுநாள் காலையில் சம்பவயிடம் சென்றுவிசாரணை செய்து, சம்பவயிடத்தில் செயின் கிடந்ததாக கூறி செயினை கொடுத்தார்கள். அ.சா.1 ம், சாட்சி ரம்யாவையும் மெர்சி மருத்துவமனைக்கு நாங்கள் அழைத்து சென்றோம். போலீஸார் என்னை விசாரணை செய்தனர்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

சம்பவம் எந்த தேதியில் நடந்தது என்றால் 15.08.2020 ம் தேதி நடந்தது. சம்பவம் எந்த இடத்தில் நடந்தது என்றால் பெருந்தெருவிற்கு கிழக்கே சுகுமார் தோட்டத்திற்கு வடப்புறம் நடந்தது. சுகுமார் தோட்டம் என்பது எப்படி தெரியும் என்றால் சிறுவயதிலிருந்து எனக்கு தெரியும். சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்றால் 08.30 மணிக்கு நடந்தது. சம்பவம் தெருவில் நடந்ததா, சாலையில் நடந்ததா என்றால் ரோட்டின் ஓரம் நடந்தது. சாலையில் மின்விளக்குகள் உள்ளதா என்றால் இல்லை. சம்பவயிடம் இருட்டாக இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்தவுடன் ஊர்மக்கள் அனைவரும் வந்தார்களா என்றால் பொன்னாகுறிச்சியிலிருந்து சில நபர்களும், பெருந்தெருவிலிருந்து ஒரு சில நபர்களும் வந்தார்கள்.

சம்பவத்தை என்னிடம் யார் கூறினார் என்றால் பெயர் எனக்கு தெரியாது. சம்பவத்தை பார்த்தவர்கள் சம்பவயிடத்திற்கு போகாமல் என்னிடம் வந்து சம்பவம் பற்றி கூறினார்கள் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு சம்பவத்தை கூறினார் என்றால் 08.35 மணிக்கு சொன்னார்கள். சம்பவயிடத்திலிருந்து காவல்நிலையத்திற்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் மணி 08.35 அல்லது 08.40 இருக்கும். காவல்நிலையம் சம்பவயிடத்திலிருந்து எவ்வளவு மணி நேரத்தில் சென்றோம் என்றால் சுமார் 5 நிமிடத்தில் வாகனத்தில் சென்றோம்.

காவல்நிலையத்தில் நாங்கள் சென்றவுடன் புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்து அதன் நகல் தந்தார்கள் என்றால் சரிதான். அதன்பிறகுதான் அ.சா.1 யையும், ரம்யாவையும் கூட்டிகொண்டு மெர்சி மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சரிதான். மெர்சி

மருத்துவமனைக்கு செல்லும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் காவல்நிலையத்திலிருந்து அரை மணி நேரம் கழித்து மெர்சி மருத்துவமனைக்கு சென்றோம். சிகிச்சையளித்த மருத்துவர் சாதாரண காயம் என்று சொன்னாரா அல்லது எலும்பு முறிவு சொன்னாரா என்றால் காலில் சாதாரண காயம் என்றும், இடது கையில் சாதாரண காயம் இல்லை எலும்பு அதற்குறிய இடத்திலிருந்து வெளியே வந்துவிட்டது என்று கூறினார். மெர்சி மருத்துவமனையில் இரண்டு நாட்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற்றார்கள் என்றால் சரிதான்.

சம்பவத்தில் எத்தனை நபர்கள் ஈடுபட்டார்கள் என்றால் 3 நபர்கள் ஈடுபட்டார்கள். 3 நபர்களும் செயினை பறிக்க முயற்சித்தார்கள் என்றால் சரிதான். எதிரிகளால் செயினை கைப்பற்றமுடியவில்லை என்றால் சரிதான். மறுநாள் தங்க செயினை போலீஸார் கைப்பற்றி எங்களிடம் ஒப்படைத்தார்கள் என்றால் சரிதான். நான் சொல்வது போல அ.சா.1 என்னுடைய சொந்த அக்கா மகள் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல சம்பவம் நடைபெறவில்லை என்றும், வழக்கு பொய்யாக பதிவுசெய்யப்பட்டது என்றால் சரியல்ல.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 443/2020 |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | திருமதி. ரேணுகா |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

எதிரிகள் ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29th day of October 2025.

நான் ஏர்வாடி பொன்னாகுறிச்சியில் வசித்து வருகிறேன். சம்பவகாலத்தில் நான் ஏர்வாடியில் உள்ள அனுரோஜா ஸ்டோரில் வேலைபார்த்துவந்தேன். வீட்டிலிருந்து இருசக்கர வாகனத்தில் தினமும் வேலைக்கு சென்றுவருவேன். எனது இருசக்கர வாகனத்தின் பதிவெண் TN 72 BW 6440 Yamaha Ray சிவப்பு கலர் இருசக்கர வாகனத்தில் சென்றுவருவேன். 15.08.2020ம் தேதி இரவு வேலை முடிந்து 08.30 மணியளவில் ஏர்வாடியிலிருந்து பெருந்தெரு செல்லும் வழியில் சுகுமார் என்பவரின் தோட்டம் அருகே நானும் என்னுடன் பணிபுரியும் ரம்யா என்பவரும் இருசக்கர வாகனத்தில் சென்றோம். நான் வண்டியை ஓட்டினேன். ரம்யா வண்டியின் பின்இருக்கையில் அமர்ந்திருந்தார். நாங்கள் செல்லும் பாதையில் வலது பக்கம் முட்களாக இருக்கும், இடது பக்கம் பனைமரங்கள் இருக்கும். பனைமரத்தின் அருகே இரண்டு நபர்கள் இருந்தனர். முட்புதர் பகுதியிலிருந்து ஒரு நபர் வந்தார். முட்புதர் பகுதியில் இருந்த நபருக்கு தோராயமாக 25 வயது இருக்கும்.

அவர் எனது இருசக்கர வாகனத்தின் அருகே வந்து எனது வண்டியின் சாவியை எடுத்து தூர எறிந்துவிட்டார். அந்த நபர் நான் கழுத்தில் அணிந்திருந்த தங்க சங்கிலியை பறித்தார். நான் எனது இருகைகளால் பிடித்தவுடன் அவரால் சங்கிலியை பறிக்கமுடியவில்லை. மீண்டும் அந்த நபர் நான் அணிந்திருந்த தங்க சங்கிலியை பிடித்து இழுத்துவிட்டார். சங்கிலி என்னுடைய கழுத்தில் இல்லை. என்னுடைய வண்டி சிறிதுதூரம் சென்று வண்டியிலிருந்து நாங்கள் கீழே விழுந்துவிட்டோம். ரம்யா வயற்காட்டில் கீழே விழுந்துவிட்டார். பனைமரம் அருகில் நின்றிருந்த 2 நபர்களில் ஒரு நபர் ரம்யாவின் கழுத்தில் அணிந்திருந்த வெள்ளி செயினை பறிக்க முயற்சித்தவுடன், அவர் சத்தம்போடவும் அருகே இருந்த நபர்கள் வந்தவுடன் எதிரிகள் மூவரும் ஓடிவிட்டார்கள். எதிரிகளை என்னால் அடையாளம் காட்டமுடியும் (எதிரிகள் ஆஜரில்லை). என்னுடைய வீடு சம்பவயிடத்தின் அருகே தான் உள்ளது. என்னுடைய சத்தம்கேட்டு ஊரில் உள்ள நபர்கள் வந்தார்கள். என்னுடைய சத்தம்கேட்டு என்னுடைய சித்தி வந்தார். வண்டியை எதிரி என்னிடமிருந்து பறித்ததால் நான் கீழே விழுந்ததில் எனக்கு இடது கை எலும்பு முறிந்துவிட்டது, இடது கால் முட்டிலும், வலது கால் முட்டிலும் சிராய்ப்பு காயம் இருந்தது. நான் சம்பவம் நடந்தவுடன் காவல்நிலையம் சென்றேன். ரம்யா எனக்கு முன்னரே மருத்துவமனை சென்று முதலுதவி செய்துவிட்டு காவல்நிலையத்தில் புகார் அளிக்க என்னுடன் என்னுடைய சித்தி, ரம்யா, என்னுடைய உறவினர்கள் வந்தார்கள். நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அது **அ.சா.ஆ.1** ஆகும். அதில் ரம்யா அறிவேன் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார்.

காவல்நிலையத்திலிருந்த போலீஸார் என்னை மெர்சி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். நான் சிகிச்சைபெற்றுவிட்டு வீட்டிற்கு சென்றேன். மறுநாள் காலையில் போலீஸார் சம்பவயிடம் சென்று விசாரணை செய்தபோது சம்பவயிடத்திலிருந்து என்னுடைய செயின் கிடைத்ததாக சொன்னார்கள். நான் காவல்நிலையம் சென்று என்னுடைய செயினை அடையாளம் காட்டினேன். என்னுடைய இருசக்கர வாகனத்தை நான் சம்பவயிடத்திலேயே விட்டு வந்துவிட்டேன். அதன்பிறகு கம்பெனியிலிருந்து வந்து வண்டியை ரிப்பேர் செய்வதற்காக எடுத்து சென்றார்கள். (முதல் விசாரணை தொடர்ச்சி எதிரிகளை அடையாளம் காட்டுவதற்காக நிறுத்திவைக்கப்படுகிறது.)